



ஈரோடு மாவட்டம் சென்னிமலை காளிக்காவலசு தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் ஏற்றுமதி விற்பனை நிலையத்தினை அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், அமைச்சர் ஆர்.காந்தி ஆகியோர் திறந்து வைத்து தொடக்க மற்றும் தொழிலில் சங்க ஏற்றுமதி விற்பனை நிலையத்தில் ஏற்றுமதியாளர்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைபெற்றது. நிகழ்வில் கைத்தறி துறை இயக்குனர் மகேஸ்வரி, மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கந்தசாமி, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ஸ்ரீதேவி, கணேசன், மாதேஸ்வரன், கைத்தறி துறை கூடுதல் இயக்குனர் மகாலிங்கம், திருப்பூர் மாவட்ட பொறுப்பாளர் இல.பத்மநாபன், கைத்தறி துறை உதவி இயக்குனர் சரவணன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# S.I.R. வாக்கு திருட்டை எதிர்த்து திருவாரூரில்“மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!”

## பூண்டி. கே. கலைவாணன் எம்.எல்.ஏ. அறிக்கை!

திருவாரூர், நவ. 10–

ஒன்றிய பிஜேபி அரசின் கைப் பாவையாக செயல்படும் இந்தியத் தேர்தல் ஆணையம்கொண்டு வந்துள்ளசிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (S.I.R.) நடைமுறையை கண்டித்து ‘மதசார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சார்பில் நாளை (11.11.2025 செவ்வாய்க் கிழமை) காலை 10.00 மணிக்கு திருவாரூரில் நடைபெற உள்ள மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் தொண்டர்கள், கழக தோழர்கள் திரளாது கலந்து கொள்ள வேண்டுகோள் விடுத்து மாவட்ட செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ.அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

அறிக்கையின் விபரம் வருமாறு,

தமிழ்நாடு முதல்வர் ,திராவிட



நாயக்கர் மு. க. ஸ்டாலின் அவர்களின் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசின் சாதனை திட்டங்களால், எதிர்வரும் சட்டமன்ற தேர்தலில் திமுக தலைமையிலான கூட்டணியே மீண்டும் வெற்றிபெறும் எனபதை அறிந்த ஒன்றிய பி. ஜே. பி. அரசு, தமிழ்நாட்டில் அரசியல் காழ்ப்புணர்ச்சிகளோடு பல்வேறு குழப்பங்களை ஏற்படுத்தி தோல்வி அடைந்த நிலையில், பீகாரில் நடைபெற்ற தேர்தலில் வெற்றிபெற தனது கட்டுப்பாட்டில் உள்ள தேர்தல் ஆணையத்தின் உதவியோடு சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (S.I.R.) கொண்டுவந்து ஏற்படுத்திய குழப்பத்தைப்போல் தமிழ்நாட்டிலும் அவசரம் அவசரமாக சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு பணிகளை கொண்டுவந்துள்ளது.

இதன் மூலம் சிறுபான்மையினர் வாக்குகள், பட்டியல் இன மக்களின் வாக்குகள் மற்றும் பா.ஜ.க.வின் எதிர்ப்பு வாக்குகள் ஆகியவற்றைக் குறிவைத்து நீக்கும் நோக்கோடும் , தகுதியுள்ள வாக்காளர்களை நீக்கி, தகுதியற்ற வாக்காளர்களைச் சேர்க்கும் சதித் திட்டத்தோடும் ஒன்றிய பா.ஜ.க. அரசு இதனைச் செய்திட முயன்றிருகக்கிறது. இந்த நடைமுறையால் பீகார் மாநிலத்தில் நடைபெற்ற குளறுபடிகள் எதையுமே களையாமல், தமிழ்நாடு உள்ளிட்ட 12 மாநிலங்களில் S.I.R திட்டத்தைச் செயல்படுத்துவது மக்களின் வாக்குரிமையைப் பறிப்பதாகவும், ஜனநாயகத்தை அடியோடு குழி தோண்டி புதைப்ப தாகவும் உள்ளது. அத்துடன் தேர்தல் ஆணையத்தின் அவசரமே அதிக சந்தேகத்தை எழுப்புகிறது.

சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (S.I.R.) என்கிற பெயரில் தமிழ்நாட்டில் உள்ள உண்மையான வாக்காளர்களின் பெயர்களைப் பட்டியலில் இருந்து நீக்க தேர்தல்ஆணையம் திட்டமிடுகிறது. இதனை கண்டித்து மாண்புமிகு கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர்களின் வழிகாட்டுதல்களின்படி நாளை (11.11.2025 – செவ்வாய்க் கிழமை) காலை 10.00 மணிக்கு, திருவாரூரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய,நகர, பேரூர் பேரூர் செயலாளர்கள், நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக பிரதிநிதிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், முன்னாள் இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், மதசார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், தோழர்கள் சமுதாய ஆர்வலர்கள் ,பொதுமக்கள் , கழக தோழர்கள் என ஜனநாயகத்தை பேணும் அனைவரும் கலந்து கொள்ள வேண்டுமாய் வேண்டுகிறேன் .

இவ்வாறு மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் .





கோவை டவுன்ஹாலில் உள்ள 82 வது வார்டு அலுவலகத்தில் தற்காலிக தூய்மைப் பணியாளர்களுக்கு வேட்டி சேலைகளை தமிழ்நாடு தூய்மைப்பணியாளர் வாரிய தலைவர் திப்பம்பட்டி ஆறுச்சாமி, துணைத்தலைவர் கனிமொழி ஆகியோர் வழங்கினர். இதில் தூய்மைப்பணியாளர் நலவாரிய உறுப்பினர் தென்னை சிவா, தாட்கோ மேலாளர் ரஞ்சித்குமார், சுகாதார ஆய்வாளர் தனபால் உள்பட பலர் கலந்து கொண்டனர்

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### துறைமுகம் நா. இராமதாஸ்
### நவம்பர் 10 (2016)



துறைமுகம் பகுதி வட்டாரத்தின் ஆரம்ப கால கழகத் தோழர்.

கழகத்திற்கு, தொடக்க காலத்தில், பகுதிச் செயலாளர்கள் நியமிக்கப்பட்டபோது, துறைமுகம் பகுதிக் கழகத்தின் செயலாளராக தலைமைக் கழகத்தால் நியமிக்கப்பட்ட சிறப்புக்குரியவர் இவர்.

கழக மூத்த தலைவர்களுடனும், முன்னோடிகளுடனும் நெருங்கிப் பழகும் வாய்ப்பைப் பெற்றவர்.

ஸ்டேன்லி அரசு பொது மருத்துவமனை ஆலோசனைக் குழு உறுப்பினராகவும், தமிழ்நாடு குடிசை பகுதி மாற்று வாரிய ஆலோசனைக் குழு உறுப்பிரானவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**






தமிழ்நாட்டில் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீரமைப்பு சீராய்வு (S.I.R.) கொண்டு வந்துள்ள இந்தியத் தேர்தல் ஆணையத்தைக் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் நாளை (11.07.2025) திருப்பூரில் நடைபெறவுள்ள மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் குறித்த ஆலோசனைக் கூட்டம் திருப்பூர் மத்திய மாவட்டக் கழக அலுவலகமான கலைஞர் அறிவாலயம் முரசொலி மாறன் வளாகத்தில் மாவட்டச் செயலாளர், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் தலைமையில் நடைபெற்றது. இதில் காங்கிரஸ் மாவட்ட தலைவர் ஆர்.கிருஷ்ணன், பி.ஆர்.நடராஜ், மூர்த்தி, மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், டிகேடி மு.நாகராசன் உள்பட கூட்டணிக் கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### நீலகிரி மாவட்ட தி.மு.க. கூட்டணிக் கட்சிகள் சார்பில்

# தீவிர வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தத்தை கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்போம்!

## மாவட்ட தி.மு.க. – தோழமைக் கட்சி நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

உதகை,நவ.10-

நீலகிரி மாவட்டத்தில் திமுக தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிள் கூட்டம் மாவட்ட கழக அலுவலகமான உதகை கலைஞர் அறிவாலயத்தில் மாவட்ட திமுக பொறுப்பாளர் கே.எம்.ராஜூ அவர்கள் தலைமையில், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் பா.மு.முபாரக், கழக தேர்தல் பணி செயலாளர் - அரசு தலைமை கொறடா கா.ராமசந்திரன் மற்றும் காங்கிரஸ் கட்சி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் நாகராஜ், சி.பி.ஐ மாவட்ட செயலாளர் போஜராஜ், சி.பி.எம் செயற்குழு உறுப்பினர் சங்கரலிங்கம், முஸ்லிம் லீக் மாவட்ட செயலாளர் அனீபா, திராவிடர் கழகம் மாவட்ட தலைவர் ஜீவா, விடுதலை சிறுத்தைகள் கட்சி மாவட்ட செயலாளர்கள் புவனேஸ்வரன், சுதாகரன், மனிதநேய மக்கள் கட்சி மாவட்ட தலைவர் அபுதாகீர், மதிமுக முன்னாள் நகர செயலாளர் அக்பர் அலி, மக்கள் நீதி மய்யம் மாவட்ட செயலாளர் ஜாகீர் ஹாசன், ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

கூட்டத்தில் திமுக சார்பில் மாவட்ட அவை தலைவர் போஜன், துணை செயலாளர் ரவிகுமார், மாவட்ட பொருளாளர் நாசர் அலி, தலைமை செயற்குழு உறுப்பினர் தம்பி இஸ்மாயில், தலைமை பொதுக்குழு உறுப்பினர் சதக்கத்துல்லா, காங்கிரஸ் கட்சி சார்பில் பொதுக்குழு உறுப்பினர் ரகு, வட்டார தலைவர் ஆனந்த், சி.பி.எம் சார்பில் தாலுகா செயலாளர் நவீன், திராவிடர் கழகம் மாவட்ட தலைவர் நாகேந்திரன், இந்திய யூனியன் தேசிய பொருளாளர் மஜீத், உதகை நகர தலைவர் அன்வர்தீன், நகர செயலாளர் முகமது, மாவட்ட துணை தலைவர்கள் யூனிஸ், ஆலி, விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் மன்னரசன், கட்டாரி, பிரபு, ரகு, ஹரி, மனிதநேய மக்கள் கட்சி சார்பில் சேக்தாவூத், யாசின், மக்கள் நீதி மய்யம் சார்பில் நாசர், சஞ்சய், ரவி, சஞ்சய் ஆகியோர் கலந்துக்கொண்டனர். முடிவில் வி.சி.க., மன்னரசன் நன்றி கூறினார்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வருமாறு:-

இந்திய தேர்தல் ஆணையம் ஒன்றிய பா.ஜ.க., அரசிற்கு அடிபணிந்து SIR எனும் தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தத்தை எதிர்வரும் 2026 சட்டமன்ற தேர்தல் நடைபெறும் தமிழ்நாடு, கேரளா உள்ளிட்ட 12 மாநிலங்களுக்கு அறிவித்துள்ளது, இதற்கு நாட்டிலுள்ள பெருபான்மையான அரசியல் கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

ஒன்றிய பா.ஜ.க.,வின் எதிர்ப்பு வாக்குகள், சிறுபான்மை மற்றும் பட்டியலின மக்களின் வாக்குகள் ஆகியவற்றை குறிவைத்து நீக்கி, தகுதியற்ற வாக்காளர்களை சேர்க்கும் சதிதிட்டத்துடன் தேர்தல் ஆணையம் செயல்பட்டு வருகிறது.

இந்நிலையில், திராவிட முன்னேற்ற கழகத்தின் தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி தலைவர்கள் கூட்டாக ஒன்றிய அரசின் இந்த சிதிதிட்டத்தை எதிர்த்திடும் வகையில் நாளை (11-11-2025 செவ்வாய்கிழமை) தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்ட தலைநகரங்களில் கண்டன ஆர்பாட்டம் நடைபெறும் என அறிவித்துள்ளனர்.

அதன்படி, நீலகிரி மாவட்ட திமுக - தோழமை கட்சிகள் சார்பில் நாளை (11-11-2025 செவ்வாய்கிழமை) காலை 11 மணியளவில் உதகை ஏ.டி.சி., ஜீப் நிறுத்தம் முன்புறம் மாபெரும் கண்டன ஆர்பாட்டம் நடைபெற உள்ளது.

ஜனநாயகத்தை பாதுகாத்திட நடைபெறும் இந்த மாபெரும் கண்டன ஆர்பாட்டத்தில் திமுக, இந்திய தேசிய காங்கிரஸ், திராவிடர் கழகம், சி.பி.எம், சி.பி.ஐ, இந்திய யூனியன் முஸ்லிம் லீக், மதிமுக, விடுதலை சிறுத்தைகள் கட்சி, மக்கள் நீதி மய்யம், மனிதநேய மக்கள் கட்சி, மனித நேய ஜனநாயக கட்சி உள்ளிட்ட திமுக தோழமை கட்சிகளின் ஒவ்வொரு நிர்வாகிகள், தொண்டர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட அனைவரும் பெருந்திரளாக கலந்துகொண்டு சிறப்பித்திட அனைவரையும் நீலகிரி மாவட்டத்திலுள்ள மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.



கோவை மாநகராட்சி, கிழக்கு மண்டலம், வார்டு எண் 23 க்குட்பட்ட மதுசூதனன் நகர் பகுதியில் மாநகராட்சி பொது நிதியின் கீழ் ரூ.22.60 இலட்சம் மதிப்பீட்டில் சுகாதார ஆய்வாளர் அறை மற்றும் வார்டு அலுவலக கட்டிடம் கட்டும் பணியினை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப. ராஜ்குமார் துவக்கி வைத்தார். இதில் மாநகராட்சி ஆணையாளர் சிவகுரு பிரபாகரன், தலைமை பொறியாளர் விஜயகுமார், கிழக்கு மண்டலகுழு தலைவர் இலக்குமி இளஞ்செல்வி கார்த்திக், உதவி செயற் பொறியாளர்கள் எழில், சத்தியமூர்த்தி கருப்பசாமி, மாமன்ற உறுப்பினர்கள் மணியன், பொன்னுசாமி, உதவி பொறியாளர் குமார் உள்பட கழக நிர்வாகிகள், மாநகராட்சி அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### குன்னூர் மு. அரங்கநாதன்
### நவம்பர் 10 (2014)



நீலகிரி மாவட்டத்தின் மூத்த முன்னோடிகளில் ஒருவர்.

குன்னூர் நகர பொருளாளர், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர் ஆகிய பொறுப்புகளை வகித்தவர்.

குன்னூர் நகராட்சித் தலைவர், குன்னூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் நலப்பணிகளை சிறப்பாக செயல்படுத்தியவர்.

கழகப் பணியில் தொய்வு ஏற்படக்கூடாது என்று திருமணம்கூட செய்து கொள்ளாதவர்.

இந்தி எதிர்ப்பு உள்ளிட்ட அறப்போராட்டங்களில் கலந்து பலமுறை சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**